**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 233/2023**

பெயர் : தேவி (PW1)

த/க/பெ. :

தேதி : 30.08.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் இடத்தை ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு பேட்டுள்ளேன். எவ்வளவு விஸ்தீரணம் ஆக்கிமித்துள்ளார்கள் என்று பிராதில் சொல்லி உள்ளேன். 464/16A சொத்தின் சர்வே எண். 18 அடி அகலம், 123 அடி நீளம்உள்ள சொத்தை ஆக்கிரமித்துள்ளார். ஆக்கிரமிப்பு சொத்து விஸ்தீரணம் வழக்கு சொத்தில் சொல்லவில்லை. தாவா சொத்து ஆரம்பத்தில் எனது பாட்டனார் முத்துகுமாரசாமி அவரது சகோதரர் இடையே பாகம் பிரித்துக் கொண்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வெங்கடேச தேவரின் வாரிசுகள் யார்என்பது தெரியாது. வெங்கடேசதேவரின் வாரிசுகள் 5 பேருக்கு தலா 7 செண்ட் வீதம் சொத்தை கொடுத்துள்ளார்கள் என்றால் அதன் விபரம் தெரியாது. அந்த விபரத்தை எதிர்வழக்குரையில் உள்ள விபரம் படித்து தெரிந்துக் கொண்டேன். தாவா சொத்து குன்றக்குடி மடத்துக்கு சொந்தமானது என்று தெரியாது. ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் வேலி போட்டுள்ளார்கள். ஷேட் எதுவும் போடவில்லை. ஆக்கிரமமிப்பு அளவுகளை என் தந்தை அளந்த போது தெரிந்துக் கொண்டோம். 2023 நவம்பர் மாதம் அளக்கப்பட்டது தேதி நினைவில் இல்லை. அளந்த சர்வேயர் பெயர் நினைவில் இல்லை. வட்டாட்சியரிடம் முறையாக மனு கொடுத்து அள்ளக்கப்ட்டதா என்று தெரியாது. பக்கத்து அனுபவதாரருக்கு முறையான அறிவிப்பு கொடுகப்பட்டு அளந்தார்களா என்பது தெரியவில்லை. வா.சா.ஆ. 1 என்ன அடிப்படையில் கொடுக்பபட்டது என்றால் நாங்கள் குடியிருந்ததால் பட்டா வழங்கப்பட்டது. எந்த வருடம் என்பது தெரியவில்லை. குடியிருந்தது தொடர்பான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி 2021 தான் ஆக்கிரமித்தார் தேதி நினைவில் இல்லை. எங்கள் வீடு இருக்கும் போதே ஆக்கிரமித்தார். ஆக்கிரமிப்பு தொடர்பாக காவல் நிலைய புகார் கொடுக்கவில்லை. சொத்தை காலி செய்ய கேட்டு என் தந்தை பிரதிவாதிக்கு அறிவிப்பு கொத்தாரா என்பது தெரியவில்லை. பிரதிவாதி எதிர்வழக்குரையில் இடத்திற்கு உரிமையாளரான மடத்தை சேர்க்க வில்லை என்று

சொல்லி உள்ள விபரம் தெரியும். மடத்தை சேர்க்க மனு தாக்கல் செய்யவில்லை. தாவாசொத்த மடத்திற்கு சொந்தமானது குடியிருப்பின் அடிப்படையில்பட்டா வழங்க இயலாது. அவ்வாறு வழங்கியிருந்தாலும் அது செல்லகூடியது அல்ல என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு பகுதியை கண்டிறிய ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்யவில்லை. 3 செண்டிற்கு மேல் பட்டா வழங்க இயலாது என்றாலும் நான் சொல்வது போல் 624 ச.மீ பட்டா வழங்க இயலாது என்றாலும் தவறான அடிப்படையில் மோசடியான வழங்கப்பட்ட பட்டா என்றாலும் அதன் அடிப்படையில் வழக்கு சொத்தில் நான் உரிமைகோர இயலாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் உரிமைமூலம் கேள்விக்குறியாக உள்ளபோது விளம்புகை பரிகாரம் இல்லாமல் சுவாதினம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றாலும் வழக்குரை மாதிரி வரைபடம் தவாறனது என்றாலும் சரியல்ல. என் சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய வில்லை என்றாலும், பிரதிவாதி உள்ளது அவருக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய்யானது என்பதால் தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.